# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 38

# கர்த்தரின் இரண்டாம் வருகை

பாகம்-2



# Our Lord's 2nd Presence

Part- 2

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# கர்த்தரின் இரண்டாம் வருகை

பாகம்-2

# Our Lord's Second Presence



**பரோசியா - எபிபானியா - அப்போகலுப்சிஸ்**

நாம் சென்ற வகுப்பில் இயேசுவின் இரண்டாம் வருகையை குறித்த பிரபலமான கருத்தும், எதிர்பார்ப்புகளும் வேதத்தின்படி இல்லை என்பதை கண்டோம்.

இரண்டாம் வருகையின் கருப்பொருளையும், வகையையும் தெரிந்துகொண்ட நாம், வேதத்தில் கூறப்பட்டுள்ள கர்த்தரின் இரண்டாம் வருகை எப்படி இருக்கும் என்பதைப் பற்றி காண நாம் அடுத்த பகுதிக்குள்ளாக செல்லலாம். பொதுவாக கிறிஸ்தவர்களுக்குள்ளே நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வருகை மறைக்கப்பட்ட ஒரு இரகசியமாகவும், தவறாக புரிந்துகொள்ளப்பட்டதாகவும் உள்ளது. எப்படி என்பதைக் காணலாம்.

**மத்தேயு 24:36**

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்"

இந்த வசனம் எந்த மாதிரியான எண்ணத்தையும் கருத்தையும் கொண்டு வருகிறதென்றால், இயேசுவின் 2ம் வருகை எப்போது? என்று யாராலும் ஒருபோதும் அறிந்துகொள்ளமுடியாது என்பதாகும்.

ஆதலால் இன்று யாருமே இவற்றைக் குறித்து விளக்கமாக பேசவோ, புரிந்துகொள்ளவோ முயற்சி எடுப்பதில்லை. ஆனால் அதே 42ம் வசனத்தில் -

"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்"

என்று புத்திமதி கூறுகிறது. யாரும் அறிந்துகொள்ளவில்லை என்றால் எதற்காக விழித்திருக்கவேண்டும்? விழித்திருங்கள் என்ற கூறியதற்கு ஏதாவது சில காரணங்கள் இருக்கவேண்டுமல்லவா?

ஏன் நமதாண்டவர் இப்படிச் சொன்னார் என்றால்,

**1தெசலோனிக்கேயர் 5:2**

"இரவிலே திருடன் வருகிற விதமாய் கர்த்தருடைய நாள் வருமென்று.."

அடையாளமாக கொடுக்கப்பட்டுள்ளது. இவை எதைக் குறிக்கிறது என்றால், இயேசுவின் 2ம் வருகையின் விதம் முற்றிலும் இரகசியமானது ஆகும். ஒருவருக்கும் தெரியாத விதத்திலும் இரகசியமாகவும், இரவில் திருடன் வருகிற விதமாக இருக்கும் என்பதே. அதன்பிறகு அதே 4ம் வசனம் கூறுகிறது -

"சகோதரரே அந்தநாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத் தக்கதாக நீங்கள் அந்தகாரத்தில் இருக்கிறவர்கள் அல்லவே".

இது எதைக் குறிக்கிறது?

கிறிஸ்துவின் 2ம் வருகையின் இரகசியம் சகோதரர்களுக்கு தெரியாததாக இருக்காது என்பதையே இது வெளிப்படுத்துகிறது.

ஆண்டவர் இயேசுவை பின்பற்றுகிறவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். எப்படி என்று நீங்கள் கேட்கலாம்.

**மாற்கு 13:35** "அப்படியே நீங்களும் விழித்திருங்கள்.."

இங்கு நமது ஆண்டவரும் போதகருமானவர்,தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு 2ம் வருகையைக் குறித்து "விழித்திருங்கள்" என்று கட்டளை கொடுப்பதோடு, 37ம் வசனத்தில் மிக அழுத்தமாக,

"நான் உங்களுக்கு சொல்லுகிறதை எல்லோருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்" என்று கட்டளை கொடுக்கிறார்.

ஆனால் அவரே வசனம் 32ல் சொல்கிறார்,

"அந்த நாளையும், அந்த நாளிகையையும் பிதா ஒருவரைத்தவிர மற்றொருவனும் அறியார், பரலோகத்தில் உள்ள தூதர்களும் அறியார்கள். குமாரனும் அறியார்"

இந்த வசனப்பகுதி எதைச் சுட்டிக் காட்டுகிறது? கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவ்வார்த்தைகளை சொல்லும் அவருக்கே தம்முடைய 2ம் வருகையை குறித்த அறிவு அப்போது இல்லை. ஏன் இப்படியானது?

ஏனென்றால், சிலுவையின் மரணபரியந்தமும் அவர் உண்மையாய் இருக்கவேண்டியிருந்தது.- **பிலிப் 2:8** . ஆதலால், இயேசு மரித்தபின்பு, அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பாக இதைப்பற்றி இயேசு அறிந்துகொண்டார்.

**மத்தேயு 28:18**

"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது"

**வெளிப்படுத்தல் 5:6,7**

"இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி, சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன். ..

அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார்"

இதைப்போலவே, போதகராகிய இயேசுவும், தன்னைப் பின்பற்றுகிறவர்களையும் விழித்திருங்கள் என்றார். ஏனென்றால் அவர்களும் ஏற்றகாலத்தில் குறிக்கப்பட்ட நேரத்தில் அறிந்துகொள்வார்கள். எப்படி என்று நாம் கேட்கலாம்? ஒன்றை நாம் நன்கு கவனிக்கவேண்டும். பலர் மிக விருப்பமுடன் யோசிப்பது என்னவென்றால், சில வேதப் பகுதிகளில்



**வெளிப்படுத்தல் 1:7**

"இதோ மேகங்களுடனே வருகிறார், கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக்குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்.பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்"

வானத்தில் முக்கியமாக மேகம் காணப்படுகிறபோது விழித்திருக்கவேண்டும் என்று காத்திருக்கிறார்கள். காத்திருத்தல் என்பது உறுதியான தீர்க்கதரிசன வசனத்தைக்குறிக்கிறது.

**2பேதுரு 1:19**

"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு. பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தை கவனித்திருப்பது நலமாயிருக்கும்"

இந்த காத்திருத்தல் என்பது, ஒரு உறுதியான தீர்க்கதரிசன வசனத்தை கவனித்து இருப்பதே. எல்லா தீர்க்கதரிசனங்களையும் புரிந்துகொள்ள ஏற்றகாலம் வரவேண்டும். அது, தேவனுடைய வார்த்தையாகிய தீபத்தின்மூலம் கிடைப்பதாகும்.

**சங்கீதம் 119:105**

"உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது"

ஆக, இப்படி நாம் நம் போதகரின் கட்டளையான 'விழித்திருங்கள்" என்பதன் அர்த்தத்தை பார்த்தோம். நாம் இப்போது நம் கர்த்தரின் இரண்டாம் வருகையைக் குறித்து சில சுவாரஸ்யமான விஷயங்களை தீபாகிய தேவனுடைய எல்லா வசனங்களிலும் காணலாம்.

புதிய ஏற்பாடு இதன் மூலப்பிரதி கிரேக்கமொழியாகும். இவற்றிலிருந்து 3 வசனங்களை அவருடைய 2ம் வருகையைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம்.இந்த 3 வசனங்களும்3 வித்தியாசமானஅர்த்தங்களைக் கொண்டது. இந்த 3 கிரேக்க வார்த்தைகளும் அதற்கு சம்மந்தமான 3 வசனங்களையும் படித்து ஆராயும்போது, ஒரு பெரிய உண்மையும்,வெளிச்சமும்˙ இந்தப்பாடத்தில் கிடைக்கும். தேவன் புதிய ஏற்பாட்டில் கிரேக்கமொழியை ஏன் பயன்படுத்தினார் என்றால், அது பிரபலமான மொழி என்பதால் அல்ல, கிரேக்கமொழி சரியான மொழி. அவ்வார்த்தைகள் சரியான

அர்த்தங்களை சொல்லுவதாலேயே, இதன்மூலம் சத்தியத்தை அறிவிக்க உதவுகிறது. அதற்கு பதிலாக இல்லாத சத்தியத்தை திரித்துக் கூறுவது இல்லை. நாம் இப்போது அந்த 3 கிரேக்க வார்த்தைகளைப் பற்றி காணலாம் -

| கிரேக்க வார்த்தைகள் | | தமிழ் அர்த்தங்கள |
|---|---|---|
| பரோசியா | ....... | இதன்அர்த்தம்பிரசன்னம் |
| எபிப்பானியா | ....... | பிரசன்னம் ஆனதின் உறுதியான வெளிச்சம |
| அப்போகலுப்சிஸ் | ....... | பிரசன்னம் ஆனதை மறைத்து வைக்கமுடியாத வெளிப்பாடு அல்லது வெளிப்படும் |

இவ்வார்த்தைகளை கிரேக்கமொழியின்நேரடி மொழிபெயர்ப்பான டையக்லாட் மூலம் வேத மாணவர்கள் சுலபமாக உண்மைகளையும் சத்தியங்களையும் கண்டுகொள்ளலாம்



## 1. பரோசியா (Parousia)

இந்த கிரேக்க வார்த்தைக்கு **'பிரசன்னம்"** என்று அர்த்தமாகும்.இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் 24முறை எழுதப்பட்டுள்ளது. ஆனால் 2இடத்தில் மட்டும்தான் பிரசன்னம் என்ற சரியான அர்த்தத்துடன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மற்ற 22இடங்களில், **'வருகிறார்"** என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

'பிரசன்னம்" என்ற வார்த்தைக்கும், 'வருகிறார்" என்ற வார்த்தைக்கும் அதிக வித்தியாசமுண்டு. 'வருகிறார்" என்பதற்கு, எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகும். ஆனால் இன்னும் வரவில்லை. எதிர்காலத்தில் நடக்கப்போகிற ஒரு சம்பவமாகும். ஆனால் பிரசன்னம் என்பதற்கு ஏற்கனவே நடந்து முடிந்த ஒன்றாகும். அதாவது பிரசன்னமாய் இருத்தல் ஆகும்.

**Strong's Greek Lexicon Search Results**

**Result of search for "Parousia":**

3952. parousia par-oo-see'-ah from the present participle of 3918; a being near, i.e. advent (often, return; specially, of Christ to punish Jerusalem, or finally the wicked); (by implication) physically, aspect:--coming, presence.

சரியாக மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கில வேதம், கிங்ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் 'பரோசியா" என்று அர்த்தம் கொள்ளும்படி 2இடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

**பிலிப்பியர் 2:12**

"எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே,
நான் உங்களுக்கு சமீபமாயிருக்கும்பொழுது(பரோசியா) மாத்திரமல்ல,
நான் உங்களுக்குத் தூரமாயிருக்கிற இப்பொழுதும்,அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும்
உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்"

**2கொரிந்தியர் 10:10**

“அவனுடைய நிருபங்கள் பார யோசனையும் பலமுமுள்ளவைகள். சரீரத்தின் தோற்றமோ(பரோசியா) பலவீனமும், வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே”

தமிழ் வேதாகமத்தில் பிரசன்னம் என்று பொருள்படும்படியாக உள்ளது. ஆனால் வருகை என்ற வார்த்தையை இங்கு பயன்படுத்தியிருக்கின்றனர். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 2 வசனங்களும் இயேசுவின் 2ம் வருகையைப் பற்றி கூறப்படவில்லை. இயேசுவின் 2ம் வருகையைக் குறித்து சொல்லும் பிரசன்னம் என்ற(பரோசியா) வார்த்தையை இங்கு 22 இடங்களிலும், “வருகிறார்” என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன்விளைவு, பெரிய சத்தியம் மறைக்கப்பட்டது.

நாம் ஒருஉதாரணத்தைப் பார்க்கலாம் -

**மத்தேயு 24:3**

“அவர் ஒலிவ மலைமேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து , இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்”

இங்கு வருகை என்பதற்கு பரோசியா என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம் “பிரசன்னம்”. இவற்றை சரியாக மொழிபெயர்த்தால் இந்த வசனம் மிகப்பெரிய சத்தியத்தை வெளியே கொண்டுவரும். அதாவது.. “உம்முடைய பிரசன்னத்தின்அடையாளம்என்ன?”

இவற்றைநாம் சரியாக புரிந்துகொண்டால் மிகப்பெரிய குறிப்புகளைஇயேசு பின்வரும் வசனங்களில் தம்முடைய 2ம் வருகை பற்றி கூறுவதை புரிந்துகொள்ளமுடியும்.

**மத்தேயு 24:26,27**

“ஆகையால் அதோ வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால் புறப்படாதிருங்கள், இதோ அறைவீட்டில் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்.

இயேசு இங்கு தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு பல தந்திரங்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்கிறார். உடல்ரீதியாக பிரசன்னம் மாம்சீகத்தில் இருக்கும் என்று நம்பி போதிப்பார்கள். நமக்கு வேதம் தெளிவாக கூறுவது என்னவென்றால், நம் கர்த்தர் இனி ஒருபோதும் மாம்சத்தில் இல்லை.

**2கொரிந்தியர் 5:16**

“இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம், நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்”

**1பேதுரு 3:18**

“கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாகநீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்”

ஆகவே நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தெய்வீக சுபாவத்தில், வல்லமையுள்ள ஆவியின் ரூபத்தில் இருக்கிறார் என்பதை வாசிக்கலாம் -

**யோவான் 5:26**

"பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்"

சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்ட பிரதான தூதனாகவும் (அப்போஸ்தலர் 3:19,20) இருக்கிறார்.

இவ்வாறு நம்முடைய கர்த்தர் அவருடைய பிரசன்னம் மற்றும் வெளிப்படுதல் நம் மாம்ச கண்களுக்குத் தெரியாது என்று விளக்குகிறார். மேலும், தொடர்ந்து வசனம் 27ல்

"மின்னல் கிழக்கில் இருந்து தோன்றி, மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்"

அதாவது இங்கு நமது ஆண்டவரின் 2ம் வருகை மின்னலைப்போல இருக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. முதலாவது நாம் கவனிக்கவேண்டியது என்னவெனில், மின்னல் கிழக்கிலிருந்து மேற்குவரைக்கும் பிரகாசிக்காது. மின்னல் தோன்றுவது குறிப்பிட்ட திசை மட்டும்இல்லை. கிழக்கில் தோன்றி மேற்கில் மறையும் ஒரு காரியம் விநோதமாக உள்ளது. ஆகையால் இந்த விஷயத்தைப் பற்றி கிரேக்க வார்த்தை என்னசொல்கிறது? என்றும் அதன் அர்த்தத்தையும் காணலாம்.

அதாவது, மின்னல் என்பதன் கிரேக்க வார்த்தையின்பொருள் அதிகதிகமான வெளிச்சம். மின்னல் அதிக வெளிச்சமாக இருந்தாலும், மேலே சொன்ன வசனங்களை புரிந்துகொள்ள உதவுகிறது.இந்த மின்னல் கிழக்கில் இருந்து தோன்றி மேற்குவரை பிரகாசிக்கிறதுபோல...இந்த பிரகாசிக்கிற வெளிச்சம் சூரியனைக் குறிக்கிறது. மேலும், வருகை என்ற இந்த கிரேக்க வார்த்தையின் அர்த்தம் பரோசியா என்று பார்த்தோம்.

இயேசுவின் 2ம் வருகையையும்,அதன்தன்மையையும் மற்றும் ஒரு பெரிய உண்மையின்(இயற்கை)மூலம் காணலாம்.அது சூரியன் (மின்னல்) கிழக்கில்இருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனுடைய வருகையும் பிரசன்னமும் இருக்கும். என்ன ஒரு உண்மையான சத்தியம்.. நம் ஆண்டவர் எதை சொல்ல வருகிறார் என்றால், அவருடைய பிரசன்னம் சூரியன் வெளிப்படும் விதமும், அது தோன்றும் விதமும் போல் இருக்கும்.கர்த்தருடைய வருகைமெதுவாகவும், பொதுவாகவும் முழு வல்லமையோடும் இருக்கும்.

மற்றும் ஒரு முக்கியமான விஷயம், சூரியனைப் பற்றி அறிந்துகொள்வது சூரிய உதயத்தை சீக்கிரமாக எழுந்திருப்பவர்கள், முதலாவது சூரியனின்மென்மையான ஒளிக்கதிர்களை காணமுடியும். மற்ற தாமதமாக கண் விழிப்பவர்கள்சூரியன் உதயமானபின் பார்க்கலாம். ஆனால் மதிய நேரத்தில் சூரியன்அதிகதிகமானவெளிச்சத்தையும்,



அதன் வல்லமையையும் எல்லோரும்பார்த்து உணரமுடியும். நம் ஆண்டவர் சூரியனைஅடையாளமாக தம்முடைய 2ம் வருகைக்கு ஒப்பிட்டுள்ளார். ஏனென்றால் அவரே ஒருநீதியின் சூரியன் என்று கூறப்பட்டுள்ளது-

**மல்கியா 4:2**

"என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும். நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்"

இவ்வாறாக நமது ஆண்டவர் தெரிவிப்பது என்னவென்றால், அவரை உண்மையாய் பின்பற்றுபவர்களுக்கு அவருடைய பிரசன்னம் முதலாவதாக காணப்படும்

**1தெசலோனிக்கேயர் 5:4-6**

"சகோதரரே அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள். நாம் இரவுக்கும்இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல் விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்"

ஆதலால் நாம் பார்ப்பது என்னவென்றால், கர்த்தருடைய சகோதரர்கள் அதிகாலை பறவைகளைப்போல முதலாவது அவருடைய பிரசன்னத்தை அறிந்துகொள்வார்கள்.

அப்படியானால் உலகில் உள்ள மற்றவர்களின் நிலை என்ன?



**மத்தேயு 24:37-39**

"நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ,அப்படியேமனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும், குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும்(பிரசன்னம்) நடக்கும்"

இங்கு காணப்படும் வருகை என்ற வார்த்தையான பரோசியா பிரசன்னம் எனப்படும். உலகத்திற்குதிரும்பி வந்துள்ள ராஜாவைப்பற்றி ஒன்றும் தெரியாது நோவாவின் நாட்களில் நடந்ததுபோல உலகமும் அறியாமல் தங்கள்சொந்த காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பார்கள். வேதத்தில் 2ம்வருகையைக் குறித்த பரோசியா என்ற வார்த்தை தவறாக மொழிபெயர்க்கப்பட்டு 22முறை வருகை என்று வந்துள்ளது.

மத்தேயு24:3,27,31,39 / 1கொரிந்தியர் 15:23 / 16:17, 2கொரிந்தியர் 7:6,7/ பிலிப்1:26 / 1தெசலோனிக் 2:19 / 3:13.'.4:15.'.5:23/ 2தெசலோனிக் 2:1,8,9,/ யாக்கோபு 5:7,8/ 2பேதுரு 1:16:

3:4,12/1யோவான்2:28.

நாம் இப்போது கர்த்தரின் 2ம் வருகை குறித்த 2ம் கிரேக்க வார்த்தையைப் பற்றிபார்ப்போம்.

## 2.எபிப்பானியா

எபிப்பானியா என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம், பிரசன்னம் ஆனதை நிருபிக்கும் உறுதியான வெளிச்சம்(ஊர்ஜிதம்). இவை2ம் வருகையைக் குறித்த 2வது படியாகும்.இவை பரோசியா என்ற பிரசன்னம் திருடனைப்போன்ற இரகசிய வெளிப்பாட்டின் நிச்சயமாகும். இவற்றை மெதுவாக விசுவாசமுள்ள கண்களால் அறிந்துகொள்ளவும், பகுத்தறியவும் முடியும். சத்திய வசனத்தின் வெளிச்சம்அதிகமாகவும்,தெளிவாகவும், பிரகாசமாகவும் இருக்கும். இவ்வாறு வெளிப்படையாக தெரிந்து புரிந்துகொள்ளுதல் தேவனுடைய வார்த்தைகளின்மேல் வைக்கும் விசுவாசத்தின்மூலம் தான் வரும் அல்லது கிடைக்கும்.

வேதம் நமக்கு போதிப்பது என்ன?

**2கொரிந்தியர் 5:6**

“நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்”

என்று தான் வேதம் சொல்கிறது. இதுதான் உண்மை. உண்மை என்பது புதிய சிருஷ்டியாக மாற்றப்பட்டவர்களும், போதகரின்(இயேசு) அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்களுக்கு மட்டுமே தெரியும். பின்பு நாம் தொடர்ந்து வேத வசனம் என்ன சொல்கிறது என்று பார்க்கலாம்.

**மத்தேயு 25:6**

“நடுராத்திரியிலே இதோ மணவாளன ˙(வருகிறார் என்பது நீக்கப்பட்ட பகுதி) .
அவருக்கு எதிர்கொண்டுபோக புறப்படுங்கள்.

இதன் அர்த்தம் என்ன? இவை நேரடி அர்த்தம் கொள்ளாமல், அடையாள பாஷையில் எழுதப்பட்டுள்ளது. நமது ஆண்டவர் வந்த விதத்தையும், அவற்றை அறிந்துகொண்ட விதத்தையும் காட்டுகிறது. இங்கு நடுராத்திரி என்பது ஒரு கால கட்டத்தைக் குறிப்பதால், பிறகு சத்தம் உண்டாயிற்று என்று பார்க்கிறோம். இந்த சத்தம் என்பது உறுதியான தீர்க்கதரிசன வசனத்தின்மூலம் தெய்வீக வெளிப்படுத்தலைக் காட்டுகிறது (2பேதுரு1:19).

இவ்வாறு தீர்க்கதரிசன சத்திய வெளிப்பாடு திரும்பிவந்த கர்த்தரைக் குறித்த வசனத்திற்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது. தீர்க்கதரிசன வார்த்தைகள் ஏற்றகாலத்தில் புரியவரும்.



அடுத்ததாக நாம்வாசிக்கும் பகுதி, “அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள்“ - நீங்கள் அல்லது ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனிப்பட்ட முறையில் அழைக்கப்பட்ட விசுவாசத்தின் அடிப்படையில் கிரியை செய்யவேண்டும்.

எதிர்கொண்டுபோக புறப்படுங்கள் என்பதன் அர்த்தம் என்ன?

**வெளிப்படுத்தல்3:20**

“இதோ வாசற்படியில் இருந்து கதவைத் தட்டுகிறேன். ஒருவன்

என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடு போஜனம் பண்ணுவேன்“

கதவைத் திறத்தல் என்பது சந்திப்பைக் குறிக்கிறது. கதவு என்பது தானாகவே முழுமுயற்சியினால் செயல்பட்டு கர்த்தரைத் தேடுபவர்களை காட்டுகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு வாக்குத்தத்தம் என்னவென்றால், நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன். போஜனம் எனக் குறிப்பிடுவது ஆவிக்குரிய உண்மையும் தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின் ஆழமான காரியங்களையும் அவர்களுடையநோக்கங்களையும் வெளிப்படையாக குறிக்கிறது.

இங்கு குறிப்பிட்டுள்ள இந்த கர்த்தருடைய வாக்குத்தத்தமானது ஒரு தனிப்பட்ட மனிதனின் விஷயமாகும். இவற்றைதெளிவாக காணலாம்.

.. ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால்..இவ்வாறாக உண்மையாக விழித்திருப்பவர்கள் அதிகதிகமாக வேதாகம ஆதாரத்தின்மூலம் கண்ணுக்குத் தெரியாத நம் ராஜாவும் கர்த்தருமாகிய இயேசுவின் பிரசன்னத்தை உணருவார்கள். கர்த்தருடைய எபிப்பானியாவின் பிரசன்னத்தை பகுத்துணர்ந்து பிரகாசமான வெளிச்சத்தைக் கண்டுபிடித்து சந்தோஷப்படுவார்கள். இப்போது நம் கர்த்தரின் முதல் மற்றும் 2ம் வருகைக்கும் உள்ள சில ஒற்றுமைகளைக் காணலாம்.

முதல் வருகையில் மாம்சத்திலும் , உடல்ரீதியிலும் இருந்தபோது, வெகு சிலரே அவரை அறிந்துகொண்டனர். குறிப்பாக யோவான் ஸ்நானகனுடைய வார்த்தைகளை கவனித்துப்பாருங்கள்.



**யோவான் 1:26**

“நீங்கள்அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவே நிற்கிறார்”.

இங்கு அறிதல் என்பது இனம் கண்டுகொள்வதைக் காட்டுகிறது. இப்படியாக பாாக்கும்போது, கர்த்தருடைய எபிப்பானியாவை யார் உணர்ந்தார்களோ அவர்களே வெளிச்சத்தில் நடக்கிறார்கள்.

**1தெசலோனிக்கேயர் 5:5**

“நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் , பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள். நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே“



அவர்களுக்கும் பிரசன்னம் அறிந்துகொள்ளக்கூடியதாக தெரியும். உவமையில் சொல்லப்பட்டபடி வெளிச்சமும் காணக்கூடியதும் சத்தியமாகிய வசனத்தின்மூலம் காணலாம்.

மத்தேயு25:1-13 இல் கூறப்பட்ட 10 கன்னியரைப் பற்றிய உவமையில், 5பேர்புத்தியுள்ளவர்களும் 5பேர் புத்தியில்லாதவர்களுமாக இருந்தார்கள். ஆனால் எல்லோரும் தீவட்டிகளை வைத்திருந்தார்கள். வசனம் 1ல்.. தீவட்டிகளை பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோக புறப்பட்ட 10 கன்னியர்களுக்கு ஒப்பாய் இருக்கும். தீவட்டிகள் என்பதன்

அர்த்தம் என்ன? வேதாகமத்தில் உள்ள தேவனுடைய வார்த்தைகளைக் குறிக்கும் சொல்லை படம்பிடித்துக் காட்டுகிறது(சங்கீதம் 119:105)

பின்பு வசனம் 3ல், புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள். எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை. ஆனால் வசனம் 4ல் புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுகூட தங்கள் பாத்திரங்களில் எண்ணெயைக் கொண்டுபோனார்கள். இவை உவமை மொழியில் எழுதப்பட்டுள்ளதை இவ்வார்த்தைகள் படம்பிடித்துக் காட்டுகிறது.

இவை எதைக் குறிக்கிறது என்று பார்க்கலாம்? எண்ணெய் என்பதன் அர்த்தம் என்ன? எண்ணெய் என்பது பரிசுத்தஆவியைக் குறிக்கிறது

**சங்கீதம் 133:2,3**

“ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்..”

பரிசுத்தஆவியின்மூலமாகத்தான் கர்த்தருடைய வார்த்தைகளை நிதானித்து, பகுத்து அறியமுடியும்-

**1கொரிந்தியர் 2:14**

“ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்”

உண்மையான தீவட்டியில் எண்ணெய் இருந்தால் தான் வெளிச்சம் பிரகாசமாய் தெரியும்.அதைப்போல பரிசுத்தஆவியாகிய எண்ணெய் இருந்தால்தான் விளக்கில் வெளிச்சம் அல்லது சத்தியம் பிரகாசமாக நம் மனக்கண்களுக்கு காணப்படும். புத்தியுள்ள கன்னிகைகள் தங்கள் தீவட்டிகளோடுகூட தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். ஆனால் புத்தியில்லாதவர்கள் அவ்வாறு செய்யவில்லை. பாத்திரங்கள் என்றால் என்ன?

**2கொரிந்தியர்4: 7**

“இந்த மகத்துவமான வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்“

இந்த பொக்கிஷமாகிய புதிய சிந்தனையை மாம்ச உடலில் பெற்றிருக்கிறோம். பாத்திரம் என்பது அவர்களுக்குள் உள்ளதைக் குறிக்கிறது.

நம் அனுதினவாழ்வில் பரிசுத்தஆவியின் செயலே நம்மைஆட்கொண்டு வழிநடத்தவேண்டும். ஆனால் புத்தியில்லாத கன்னிகைகள் உலகக் கவலைகளினாலும், தந்திரமான ஐஸ்வரியத்தினாலும் அதிகமாக நிரப்பப்படுகின்றனர். பரிசுத்தஆவிக்கு பதிலாக உலகின்ஆவி அவர்கள் பாத்திரங்களை நிரப்பினதால், சரியான நேரத்திற்கு தயாராக முடியவில்லை. இவ்வாறாக அவர்களால் கர்த்தருடைய எபிப்பானியாவை (பிரசன்னத்தை, பிரகாசமான வெளிச்சத்தை) கண்டுணர முடியவில்லை.

ஆனால் புத்தியுள்ளவர்களின் தீவட்டி(வேதம்) பிரகாசமாக எரிந்து சத்தியமாகியதீபம்

அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொண்டுவருகிறது. எபிப்பானியாவின் மொழிபெயர்ப்பின் அர்த்தம் **'தோன்றுதல்"** என்பதாகும். இவற்றை நான்கு முறை வேதம் கூறுகிறது. 1தீமோத்தேயு 6:14, 2தீமோத்தேயு4:1,8, தீத்து 2:13.

நாம் இப்போது இயேசுவின் 2ம் வருகையின் 3ம் கிரேக்கவார்த்தையைக் குறித்து பார்ப்போம்.



## 3. அப்போகலுப்சிஸ்

இந்த கிரேக்க வார்த்தைக்கு வெளிப்படுத்தல் அல்லது மூடப்படாதிருத்தல் அல்லது முக்காட்டை நீக்குதல், ஏற்கனவே பிரசன்னமாக இருத்தல் அல்லது பார்வைக்கு மறைக்கப்படாதிருத்தல் என்றுபொருள். இது நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் 2ஆம் வருகையின் கடைசிநிலையாகிய வெளிப்படுத்தலை காட்டுகிறது.இது எப்போது ஏற்படுகிறது என்றால், முழுமையான சபை முழுவதும் கிறிஸ்துவின் சரீர அங்கங்கள்1,44,000 முடிவடைந்தபிறகு தான் நிறைவேறும். எவ்வாறு இப்படிச் சொல்லமுடிகிறது என்று இப்போது பார்ப்போம் -

நம் ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்பொது நீங்களும் அவரோடுகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.இந்த வேதப்பகுதி கிறிஸ்து தோன்றுதல் அல்லது காணப்படுதல் அல்லது உலகத்திற்கு வெளிப்படுதலை காட்டுகிறது. மேலும் இன்னும் ஒரு வேதாகம வசன ஆதாரம்

**ரோமர் 8:19**

"தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது"

இதன்அர்த்தம் என்ன? சிருஷ்டி எனப்படும் மனுக்குலத்தின் ஆவல் காத்திருத்தல் அல்லது துன்பம் வருத்தம் மரணம் போன்ற எல்லாவற்றிலும் இருந்து விடுதலை அடையவேண்டும் என்ற விருப்பத்தைத் தான் காட்டுகிறது. நாம் இந்த ஆவலையும், நம்பிக்கையையும் குறிப்பிட்ட நேரத்திற்கு காத்திருத்தலைப் பற்றி படிக்கலாம்.

எப்போது இது நடக்கும்? தேவனுடைய புத்திரர்கள் வெளிப்படும்போது இவர்கள் எல்லோரும் விசேஷித்த புத்திரர்கள். இவர்களைத் தேடி வாய்ப்புக் கொடுக்கவே இயேசு வந்தார்-

**யோவான் 1:12**

"அவருடைய நாமத்தின்பேரில் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்"

இதுவே மகிமையடைந்த சபையின் தெய்வீகசுபாவத்தில் உள்ள தேவனுடைய பிள்ளைகள் ஆவர். இவ்வாறாக முடிவடைந்த மகிமையான சபை சிருஷ்டிகளின் ஆசீர்வாதத்திற்கு தலைமையான தொடக்கமாகவும், அப்போகலுப்சிஸ் நிலை அல்லது ராஜாதிராஜா அல்லது கர்த்தாதி கர்த்தரின்

வெளிப்படுதலை அறிவிப்பவதாகவும் இருப்பதைக் காணலாம்.

பின்பு நடப்பது என்ன?

**2தெசலோனிக்கேயர் 1:7,8**

“தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும்,ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்“

இந்த வேதப்பகுதி தெளிவாக மகிமையான சபை முடிவடைந்தபிறகு எப்படி வல்லமையுள்ள தூதர்களாக மாறுவதை குறிக்கிறது?

**மத்தேயு 25:31**

“அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்”

**யூதா 14**

“தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்..”

மகா உபத்திரவ காலத்தில் எல்லா மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள் முழுவதும் அக்கினியால் அழிக்கப்பட்டு, எரிந்துபோகும்.

**2பேதுரு 3:10**

“கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம்.பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்”

இவற்றை பூமியில் அடையாளமாக நெருப்பு என்று கூறப்பட்டுள்ளது. கண்ணுக்குத்தெரியும் தேவனுடைய ராஜ்யம் அறிவிக்கப்பட்டு பின்பு மெதுவாக விரிவாக்கப்படும்.

இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கும்படிக்கும்...இவ்வாறு நாம் படிப்பது வெளிப்படுத்தல் 1:7ல் கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். இந்த வேதப்பகுதி மாம்சீக கண்கள்காணும் நேரடி தரிசனத்தைக் குறிக்காமல், இயேசு உயிர்த்தெழுந்தபின்பு நேரடியாக அவரைப் பார்த்தவர்களுக்கு என்ன நடந்தது என்று பாருங்கள்.

அப்போஸ்தலர் 9:3-9 - இதில் தர்சு ஊரானாகிய சவுல் பார்வையை இழந்து 3 நாள் புசியாமலும் குடியாமலும் இருந்தான். இதுவே அதன் விளைவாகும்.முழுஉலகத்தையும் கற்பனை செய்து பாருங்கள்.எல்லா கண்களும் அவருடைய மகிமையை நேரடி தரிசனத்தில் பார்ப்பதாக இருந்தால் என்ன நடக்கும். ஆதலால் இந்த கண்கள் யாவும் என்பது எதைக் காட்டுகிறது என்றால்,

புரிந்துகொள்ளும்திறமை கொண்ட மனக்கண்களையே காட்டுகிறது அப்போஸ்தலர் 26:18,எபே 1:18.

கர்த்தருடைய பரோசியா அல்லது எபிப்பானியா நிலையை சபை வகுப்பார் மட்டுமே நெருக்கமாக கண்டு உற்று நோக்கி, ஆனந்தமடைவர். ஆனால் உலகத்திற்கு சத்தியத்தில் மெதுவாக பிரகாசிக்கப்பட்டு எல்லா பாடங்களிலும் அறிவைப்பெற்று எல்லா இடங்களிலும் பரவும்போது மனித அமைப்புகள் அதிகமாக அசைக்கப்படும்-எபி12:26,27. இதனால் உபத்திரவக் காலத்தில் பயங்கரமான மோதலை உண்டுபண்ணும்-மத்தேயு 24:21,22. இது உலகத்திற்கு புரிந்துகொள்ளும் மனக்கண்களைத் திறக்கும் என்று தெளிவாகிறது. ஏசாயா29:18.˙.35:5. இவ்வாறாக கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் என்பது இஸ்ரயேல் தேசத்தைக் குறிக்கிறது. இந்த அப்போகலுப்சிஸ் நிலை ஆயிர வருட அரசாட்சி முடியும்வரை தொடரும். ஏனென்றால் பிரேதக் குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம்வரும்-யோவான்5:28. இது மரித்தோரை உயிரோடு கொண்டு வருதல் ஆகும். இது மெதுவாக நடக்கும். முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் எழுந்திருப்பார்கள். இவ்வாறாக கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும். மாம்சமான யாவும் அவரை ஏகமாய்க் காணும்.

ஆம். எல்லா மாம்சமும் அதாவது அனைத்து மனுக்குலமும், உயிரோடு இருப்பவர்களும் ,மரித்தவர்களும் கர்த்தருடைய அப்போகலுப்சிஸ் நிலையைப்பார்த்து புரிந்து இனங் கண்டுகொள்வார்கள்.

**வெளிப்படுத்தல் 1,18**

“மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்.ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்“

அதன்பிறகு

**வெளிப்படுத்தல் 5:13**

“அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்”

உண்மையாகவே ஆயிர வருட பிரகாசத்திற்குப்பிறகு சத்தியமும் ஆசீர்வாதமுமே சிறந்த விளைவு அல்லது முடிவாகும். வேதத்தில் அப்போகலுப்சிஸ் மொழிபெயர்க்கப்பட்டு 12 இடங்களில் வெளியிடப்பட்டது.

லூக்கா 12:2, 17:30/ரோமர் 8:18,19/ 1கொரிந்தியர் 1: 7, 3:13 / 2தெசலோனிக்கேயர் 1: 8 / 1பேதுரு 1:7,5,13 / 4:13.

கர்த்தருடைய 2ம் வருகைக்கு சம்பந்தமான வார்த்தைகளை படித்தபிறகு 2ம் வருகையின் காலத்தேதியை வேதத்தில் வெளியிடப்பட்டிருக்குமானால் அதை இப்போது தேடலாம்.வேதத்தில் கால தேதி வெளியிடப்பட்டுள்ளதா? நாம் அடுத்த பாடத்தில் இந்தக் கேள்விக்கு பதிலை கண்டுபிடிக்கலாம்.

**தேவ கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/biblereserch/